# என்னையே முழுவதும்

என்னையே முழுவதும்
உன்னிடம் தருகின்றேன்
என் மனம் அறிந்து நீ
உன் கையில் ஏற்றிடுவாய் ( 2 )

**1**
உண்மைக்காக வாழ்ந்திடும்
நெஞ்சம் என்னில் உண்டு
உயிர் கொடுக்கவும் துணிந்திடும்
உந்தன் பாதை சென்று -2
என்நெஞ்சில் வாழ்பவர் நீர் தானே
இனி அச்சம் கொள்வதும் வீண்தானே-2
எந்;தன் பணியில் ஆயிரம் தடைகள்
வந்திடும் ஆயினும் யேசுவே
உனது பணியில் பயணம் தொடரும்

**2**
எந்தன் வாழ்வின் பொருளினை
உந்தன் வாழ்வில் கண்டேன்
சுய நலத்தின் சிறைகளை
களைந்து என்னைத் தந்தேன் ( 2 )
ஒரு ஜீவன் என்னாலே உயிர்வாழ்ந்தால்
அதுதானே உன்முன்னால் பெரிதாகும் ( 2 )
மகிழ்வைத் தேடிடும் மானிடர்
மகிழ்ந்திட தந்திடும் எம்மையே
உமது கரத்தில் ஏற்க வேண்டும்